**சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)**
**திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்**
**MCOP . No.189/2021**

**நாள் : 24.03.2026**

**ம.சா.** 1 (மனுதாரர் தரப்பில்) வது நபரின் வாக்குமூலம் (1959)–ம் ஆண்டின் 54 வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.நாராயணன் | மாவட்டம் | : | திருப்பத்தூர் |
| தந்தை / கணவர் பெயர் | : | திரு.ஆரமுதன் | வயது | : | 53 |
| ஊர் | : | திருப்பத்தூர் | தொழில் | : | LIC assistant administrative officer |
| வட்டம் | : | திருப்பத்தூர் | தேசியம் | : | இந்தியன் |

நான் இந்த வழக்கில் மனுதாரர் ஆவேன். இந்த வழக்கிற்கான நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டவை மற்றும் உண்மையானவை. அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான்.

1. முதல் தகவல் அறிக்கை நகல் – ம.சா.ஆ.1

2. விபத்து பதிவேடு அறிக்கை நகல் – ம.சா.ஆ.2

3. டிஸ்சார்ச் சம்மரி நகல் – ம.சா.ஆ.3

4. TN 25 AV 1469 என்ற வாகனத்தின் காப்பீட்டு பாலிசி நகல் –ம.சா.ஆ.4

5. TN 25 AV 1469 என்ற வாகனத்தின் பதிவு புத்தகம் நகல் – ம.சா.ஆ.5

6. மனுதாரரின் ஓட்டுநர் உரிமம் நகல் – ம.சா.ஆ.6

7. மனுதாரரின் ஆதார் அட்டை நகல் – ம.சா.ஆ.7

18. 1 ஆம் மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகம் நகல் – ம.சா.ஆ.8

9. மனுதாரரின் மாத சம்பள பட்டியல் அசல் – ம.சா.ஆ.9

10. வாடகை காரில் சென்றதற்கான பில்கள் அசல் ரூ.30,000/– ம.சா.ஆ.10

மனுப்படி தீர்ப்பாக கோருகிறேன்.

**<u>2ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

நான் விபத்து சமயத்தில் இருசக்கர வாகனத்தை ஓட்டிச் சென்றேன் என்றால் ஆமாம். விபத்து வேலூர்–ஆற்காடு சர்வீஸ் ரோட்டில் விபத்து நடநத்து என்றால் சரிதான். நான் சர்வீஸ் ரோட்டில் ரஇருந்து மெயின் ரோடு செல்லவேண்டி கட் செய்தபேதுதான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் சர்வீஸ் ரோட்டில்தான் போய்க்கொண்டிருந்தேன். எனக்கு பின்னால் வந்த காரை கவனிக்காமல் திடீரென வலதுபுறமாக திரும்பியதால்தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் அடிபட்டவுடன் வேலூர் அரசு மருத்துவமனைக்கு 108 ஆம்புலன்சில் போனேன் என்றால் சரிதான். அங்கு எனக்கு எக்ஸ்ரே எடுக்க சொன்னார்கள் என்றால் சரிதான். அவ்வாறு எக்ஸ்ரே எடுத்து பார்த்ததில் மேல்சிகிச்சைக்காக வேலூர் சிஎம்சிக்கு மறுநாள் காலையில் போனேன். அவ்வாறு மேல்சிகிச்சைக்கு குறித்தனுப்பப்பட்டததற்கான referral slipஐ தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வாய்மொழியாக சொன்னார்கள். மறுநாள் சிஎம்சிக்கு போனதற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னுடைய சொந்த ஊர் சென்னை என்றால் சரியல்ல. திருப்பத்தூர் எனது சொந்த ஊர். நான் மியாட் மருத்துவமனையில் அட்மிட் ஆகும்போது விபத்தில் ஏற்பட்ட காயங்களுக்கு மேல்சிகிச்சைக்கு அனுப்பிவைக்கப்பட்டதாக சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. எனது வலதுபக்க தோள்பட்டையில் எலும்பு முறிவு ஏற்பட்டது. ஆரம்பத்தில் OPD ஆக treatment கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். விபத்திற்கு பின்னிட்டு

உடனடியாக புகார் கொடுக்கவில்லை என்றும், 5 நாட்களுக்கு பின்னிட்டுதான் கொடுத்தேன் என்றால் சரிதான். எனக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்பதால்தான் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயம் major காயம் என்பதால் உள்நோயாளியாக இருந்ததால் உடனடியாக புகார் கொடுக்க இயலவில்லை என்று சாட்சி கூறுகிறார். 07.08.2021ஆம் தேதி வேலூர் அரசு மருத்துவமனைக்கு போனேன். அதற்கு பின்னிட்டு 11.08.2021அன்றுதான் சென்னை மியாட் மருத்துவமனைக்கு போனேன் என்றால் சரிதான். இதற்கிடைப்பட்ட காலத்தில் எங்கு சிகிச்சை எடுத்தேன் என்பதற்கான ஆவணம் தாக்கல செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு விபத்தினால் ஏற்பட்ட காயத்தினால் எந்த ஒரு ஊனமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. எனக்கு தனிப்பட்ட முறையில் mediclaim policy உள்ளது என்றால் சரிதான். அந்த பாலிசிபடி நான் செலவு செய்த தொகையை பெற்றுக்கொண்டேன் என்றால் சரிதான். எனது வருமானத்துடன்கூடிய விடுப்பு அளிக்கப்பட்டது என்றால் சரிதான். எனக்கு சொந்தமாக கார் இல்லை. வாடகை காரில்தான் சென்னை மியாட் மருத்துவமனைக்கு போனேன். ம.சா.ஆ.10 ல் கண்ட 4 போக்குவரத்திற்கான பில்கள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 4 முறை மியாட் மருத்துவமனைக்கு சென்றுவந்ததற்கான மருத்துவ ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் review-க்கு போனேன். ஒவ்வொரு முறையும் ரூ.7500/- செலுத்தி வாடகை காரில் சென்றுவந்ததாக வழக்கிற்காக மிகைப்படுத்தி சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அந்த வாகனத்தின் பதிவு எண் எனக்கு தெரியாது, அது டிராவல்ஸ் வாகனம் ஆகும். ஒவ்வொரு முறையும் வேறுவேறு வாகனத்தில் சென்றேனா என்றால் என்ன வாகனம் அனுப்பினார்களோ அந்த வாகனத்தில் போனேன். ம.சா.ஆ.10 ஆவணம் வழக்கிற்காக தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. விபத்தினால் எனக்கு வருமான இழப்பு ஏற்படவில்லை என்றால் சரியல்ல. ராடை அகற்ற ரூ.2,00,000/- தேவைப்படுவதாக கூறியுள்ள நிலையில் அதற்குண்டான கொட்டேசனை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

அவ்வாறு அகற்றுவதற்கு இன்சூரன்ஸ் மூலமாக தொகை வழங்கப்படும் என்றால் சரியல்ல. Removal of plate not coverage under insurance policy என்று சாட்சி கூறுகிறார். நான் பல்வேறு தலைப்புகளின் கீழ் கோரியுள்ள தொகை மிகைப்படியானது என்றால் சரியல்ல. விபத்து என்னுடைய அஜாக்கிரதையால் ஏற்பட்டுள்ளதால் அதனை பொருத்து வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. 1ஆம் எதிர்மனுதாரர வாகனத்தை ஓட்டிச் சென்றவருக்கு முறைப்படி ஓட்டுநர் உரிமம் இல்லாததால் 1ஆம் எதிர்மனுதாரர் சார்பாக 2ஆம் எதிர்மனுதாரர் ஈட்டுறுதி ஏற்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. 1ஆம் எதிர்மனுதாரர் பாலிசி நிபந்தனைகளை மீறியுள்ளதால் 2ஆம் எதிர்மனுதாரர் ஈட்டுறுதி ஏற்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. அவ்வாறு தொகை செலுத்தவேண்டியிருப்பின் அதனை 1ஆம் எதிர்மனுதாரரே செலுத்த கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல.

**நீதிமன்ற அனுமதியுடன் மறுவிசாரணை**

விபத்து நடந்த சமயத்தில் எனது மாத சம்பளம் ரூ.1.5 லட்சம் ஆகும். மேமற்படி தொகையானது நான் விபத்தினால் காயம்பட்டு விடுப்பு எடுக்காதபட்சத்தில் பின்னாளில் அதை சரண்டர் செய்து தொகை வழங்கப்படும் என்றால் சரிதான். ம.சா.ஆ.3 டிஸ்சார்ஜ் சம்மரியில் கார் அல்லது ரயில் மூலமாக வரவேண்டும் என்று கண்டுள்ளது என்றால் சரிதான். அதேபோல் நான்கு முறை வரவேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்,

**மறு குறுக்கு விசாரணை**

ம.சா.ஆ.3 டிஸ்சார்ஜ் சம்மரியில் after two weeks come review for shoulder OPD என்ற சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான்கு முறை என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். review after 15 days once in diabeticalogy என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள சம்பள பட்டியல் ஒரு மாதத்திற்குண்டானது என்றால் சரிதான். அதில் குறிப்பிட்டுள்ள தேதி 07.09.2021 என்றால் சரிதான். எனக்கு சம்பளம் வங்கி மூலமாகத்தான் வழங்கப்படும் என்றால் சரிதான். எனது வங்கி கணக்கு புத்தகத்தை தாக்கல்

செய்யும் நிலையில் வருவாய் இழப்பு உள்ளதா இல்லையா என்பது பற்றி தெரியவரும் என்றால் சரிதான்.

ஒம்/. J. நாகலட்சுமி @ விஜயராணி(FAC),
சிறப்பு சார்பு நீதிபதி (MACT),
திருப்பத்தூர்.